
# சிவவிரதங்களும் கௌரிவிரதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவ விரதங்களும் கேதாரகௌரி விரதமும்

## சிவ விரதங்கள் பற்றிய விளக்கங்கள், கதைகள், அனுஷ்டிக்கும் முறைகள்

தொகுப்பாசிரியர்:

வித்யாபூஷணம், சாதக சிரோமணி,

பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B. A. (Hons)

(கோப்பாய் சிவம்)

வெளியீடு

ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி

தேவஸ்தானம்

வல்வெட்டித்துறை

*28 - 10 - 2008*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டுத் தரவுகள்


| | |
|---|---|
| நூலின் பெயர் | சிவவிரதங்களும் கேதாரகௌரி விரதமும் |
| மொழி | தமிழ் |
| விடயம் | சிவ விரதங்கள் பற்றிய கதைகள், அனுட்டான முறை முதலிய விபரங்களின் தொகுப்பு. |
| தொகுப்பாசிரியர் | பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா B.A.Hons. (கோப்பாய் சிவம்) |
| வெளியீடு | ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம் |
| கணினி வடிவமைப்பு | ஸ்ரீவித்யா கணினி அச்சகம், இணுவில், சுன்னாகம், ஸ்ரீ லங்கா. |
| அச்சுப்பதிப்பு, அட்டை வடிவமைப்பு | சிவரஞ்சனம் , கோண்டாவில். |
| பக்கங்கள் | |
| முதற்பதிப்பு | 28 – 10 – 2008. |
| விலை | ரூபா 100.00 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

பாரம்பரியப் பெருமையும் திருவருட் சிறப்பும் மிக்க வல்வெட்டித்துறை சிவன் கோவில் நித்திய நைமித்திகக் கிரியைகளாலும் பக்தர்களின் வழிபாட்டுச் சிறப்பினாலும் மேலும் பொலிவுற்று விளங்குவதொன்றாகும். இங்கு விரத வழிபாடுகளும் மிகச் சிறப்பாக நடந்துவருவது குறிப்பிடத்தக்கது.

வருடம்தோறும் இங்கு நடைபெறும் கேதாரகௌரி விரத பூஜையில் குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூடுவார்கள். கிரமமாகப் பூஜை வழிபாடுகள் நடைபெற்றுக் கேதார கௌரிவிரத கதை படிக்கப்பட்டு அனைவரும் அமைதியாக இருந்து கேட்பது அருமையான காட்சியாகும்.

சிவராத்திரி, பிரதோஷம், திருவெம்பாவை முதலிய விரதங்களும் மிகச்சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகின்றன. கல்யாண சுந்தர விரதம் எனப்படும் பங்குனி உத்தர நந்நாளை இறுதியாகக் கொண்டே இச்சிவாலயத்தில் மஹோற்சவம் நடைபெறுகிறது.

இவ்விரதரங்களைப்பற்றி விபரமாக அடியார்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் காரணமாக இந்நூல் வெளியிடப்படுகிறது. ஏற்கெனவே 1998 ஆம் ஆண்டில் கேதாரகௌரி விரதம், பிரதோஷ விரதம் இரண்டையும்பற்றி ஒரு நூலை வெளியிட்டிருந்தோம். இப்போது சிவ விரதங்கள் அனைத்தையும் தொகுத்து இந்த நூலை வெளியிடுகின்றோம்.

இந்நூலைத் தொகுத்துக் கணினி வடிவத்தில் அமைத்த அன்புக்குரிய "கோப்பாய் சிவம்" அவர்களுக்கும் அழகுற அச்சில் பதித்து வழங்கிய கோண்டாவில் சிவரஞ்சனம் ஓவ்செற் பிறின்ரேர்ஸ் உரிமையாளருக்கும் வெளியீடு செய்கின்ற தேவஸ்தானத்தினருக்கும் நன்றிகள் என்றும் உரியன.

**சர்வே ஜனா: சுகினோ பவந்து.**

**பிரதமகுரு,**
**ஸ்ரீவாலாம்பிகா சமேத**
**வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்**
**வல்வெட்டித்துறை.**

**சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்**
**தலைவர்,**
**சர்வதேச இந்துமத**
**குருமார் ஒன்றியம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள்

நாளாந்த செயற்பாடுகளில் இறைசிந்தனையும் வழிபாடும் இயல்பாக இணைந்துகொள்வதுடன் இறைவழிபாடுகளான விரதங்கள் நமக்குச் சுமையானவையல்ல, சுகமானவை என்ற விருப்புணர்வுடன் யாவரும் அவற்றில் இணைந்துகொள்ளக் காரணமாக அமைவன அவற்றில் இணைந்து காணப்படும் சடங்காசாரமான விழாக்கள் தான். விரதங்கள் எவை? விழாக்கள் எவை? என்ற பேதமின்றி அவற்றில் இவையும் இவற்றில் அவையும் கலந்து காணப்படுவதே நமது இந்து வாழ்க்கையின் சிறப்பு. விழாக்களிலும் பண்டிகைகளிலும் விரதங்களிலும் இந்துசமயத்தின் உயிர்நாடி ஊடுருவிநிற்கிறது.

இத்தனை சிறப்புக்கள் இருப்பினும் ஒரு விடயத்தை நாம் மனங்கொள்ள வேண்டியுள்ளது. கொண்டாட்டங்களாக விரதங்கள் பல அமைந்திருப்பதனால் சில அபூர்வமான விரதங்களின் புனிதத் தன்மையும் இறுக்கமான கட்டுப்பாடுகளும் புரிந்துகொள்ளப்படாமல் மனம்போனபடி அனுட்டிக்கப்படுவதை இன்று அவதானிக்க முடிகிறது. சரியான நோக்கம், விதிமுறை என்பன தெரிந்துகொள்ளப்படாமல் அல்லது அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் புறச்சடங்குகள் முதன்மைப்படும் நிலை இன்று பரவலாகக் காணப்படுகிறது.

ஒருவர் அனுட்டிப்பதைப் பார்த்துவிட்டுத் தானும் அனுட்டிப்பது தவறாகும். யார் யார் எந்தெந்த விரதத்தை அனுட்டிக்கலாம் எதற்காக எந்த விரதத்தை அனுட்டிக்கவேண்டும் என்பவற்றை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். தனக்குரிய விரதம் எது எனத் தெரிந்துகொண்டு அதற்குரிய விதிமுறைகளை அறிந்துகொண்டு விரதமிருக்கத் தொடங்கவேண்டும்.

கன்னியரும் காளையரும் கல்யாணம் செய்யுமுன்னர் குழந்தைப் பேற்றை நாடி விரதமிருக்கலாமா? மஹாபாரதத்தில் குந்திதேவி தனக்குக் கிடைத்த மந்திர உபதேசத்தை அதற்குரிய வேளை வருமுன் பரிசோதித்துப் பார்த்ததால் கன்னியாகவே குழந்தை பெற்றெடுத்து அதனால் துன்பமுற்றதை யாவரும் அறிவர்.

எனவே, வரன்முறை தெரிந்து விதிமுறைப்படி விரதங்களை அனுட்டித்து யாவரும் நற்பேறடையவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில விதிகளும் மரபுமுறைகளும்

விரதங்களுட்சில, நித்தியவிரதங்களென்றும் வேறுசில காமிய விரதங்களென்றும் சொல்லப்படும். சில தேவைகளை முன்னிட்டு இறைவனிடம் நமது வேண்டுதல்களை முன்வைத்துக் குறிப்பிட்ட காலத்துக்கு அனுஷ்டித்து அதன்பின் உத்தியாபனம் செய்யப் படுபவை காமிய விரதங்கள். அப்படியல்லாமல் எதுவித பலன்களையும் எதிர்பாராமல் அமாவாசை முதலிய விரதங்களைத் தொடர்ந்து அநுஷ்டித்தல் நித்திய விரதங்களாம்.

"தாய்தந்தையர் இறந்த திதிகளாக ஆண்டுதோறும் வரும் சிராத்ததின விரதம், மாதந்தோறும் வரும் அமாவாசை விரதம், புரட்டாதி மாதத்தில் வரும் மாளய சிராத்ததின விரதம், சித்திரை, ஐப்பசி மாதப் பிறப்புக்களான விஷுபுண்ணியகால விரதங்கள் ஆடி, தை மாதப் பிறப்புக்களான அயன புண்ணியகால விரதங்கள் எனபன பிதிரர் விரதங்களுள் சிறந்தவை. இவை காலஎல்லை கருதாமல் அறிவு உள்ளவரை கடைப்பிடிக்க வேண்டிய விரதங்களாம்" (க.வை.ஆ. சர்மா. 'ஈழநாடு')

பொதுமக்கள் பெரிதும் காமிய விரதங்களை விரும்பி அநுஷ்டிக்கின்றனரெனினும் உரிய முறைப்படி சரியான விதி முறைகளை அறிந்து கைக்கொள்வோர் மிகச்சிலரே!

இன்ன இன்ன விரதங்கள் இன்ன இன்ன நோக்கத்துக்காக அநுஷ்டிக்கப்பட வேண்டும். இத்தனை வருடங்கள் கைக்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு கைக்கொள்ளப்பட வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள் உண்டு. அவற்றை அறிந்து முறையாகக் கைக்கொள்வது அவசியம்.

அதிகாலைத் துயிலெழுதல், நீராடித் தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிதல், சந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மாநுஷ்டானங்களை (அநுட்டானம் பார்த்தல்) முறைப்படி செய்தல், ஆலய வழிபாடு செய்தல், காலை மாலை வீட்டில் சுவாமி அறையில் விளக்கேற்றி வழிபட்டு இயன்றவரை திருமுறைப்பாடல்கள் மற்றும் தோத்திரப் பாடல்களைப் பாடுதல், விபூதி, உருத்திராக்கம் முதலிய சமய சின்னங்களை அணிந்திருத்தல், காலை உணவினை நீக்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியம் ஒருவேளை மட்டும் அன்னமும் இரவில் பால்பழம் அல்லது பலகாரம் உண்ணல் என்பன எல்லா விரதங்களுக்குமே முக்கியமாக வேண்டப்படும் கட்டுப்பாடுகளாகும்.

விரதநாளிலும் அதற்கு முதல் நாளிலும், மறுநாளிலும் மச்சம், மாமிசம், முட்டை முதலியவற்றை முற்றாக நீக்குதல், தம்பதிகள் குடும்ப உறவைத் தவிர்த்தல் என்பனவும் அவசியமாகும். உபவாச விரதமெனில் முதல் நாளிலும், அடுத்த நாளிலும் ஒருநேர உணவுண்டு விரதமிருத்தல் வேண்டும்.

உபவாசமாக இருப்பவர்கள் விரதத்திற்கு முதல் நாள் ஒரு பொழுது உணவுடன் விரதமிருந்து உபவாசத்துக்கு மறுநாள் காலை எட்டரை மணிக்குள் பாரணை செய்ய வேண்டும். பாரணையிலன்று மறுபடி உணவு கொள்வதும் தகாது. இரவில் பால்பழம், பலகாரம் என்பன உண்ணலாம். இது உபவாச விரதங்கள் யாவற்றுக்கும் பொதுவிதி.

தாமச குணங்களை அதிகப்படுத்தும் வெங்காயம், உள்ளி, முருங்கைக்காய், சுரைக்காய், நீற்றுக்காய் இவற்றையும் இந்நாட்களில் உணவில் சேர்க்கக்கூடாது. தாம்பூலம் தவிர்க்கப்பட வேண்டும். விரத நாட்களில் இயன்ற அளவு தானதர்மங்கள் செய்ய வேண்டும். மாஹேஸ்வரபூஜை (அன்னதானம்) செய்வது மிக நன்று.

ஒரு விரதத்தை ஆரம்பிக்குமுன், இன்ன நோக்கத்துக்காக இன்ன முறைப்படி இவ்வளவு காலம் இந்த விரதத்தை அநுஷ்டிக்கப்போகிறேன்" என்று உறுதியாகத் தீர்மானம் செய்து (சங்கல்பம் செய்து) ஆலயம் சென்று சங்கல்பபூர்வமாக அர்ச்சனை வழிபாடுகள் செய்து ஆரம்பிக்க வேண்டும். குறிப்பிட்ட கால எல்லைவரை மாற்றமின்றி அவ்விரதத்தை ஒழுங்காகக் கைக்கொள்ள வேண்டும்.

விரத நியமங்களை ஆரம்பத்திலேயே அளவுடன் கைக்கொள்வது நன்று. கடுமையான முறையில் ஆரம்பித்துப் பின்னர் அரைகுறையாக நிறுத்துவது கூடாது. "விரதத்தைக் கிரமப்படி அனுசரிக்க முடியாதவர் தம்மாலியன்றளவு அனுசரிப்பதே தகுதி. தம்மளவுக்கு மீறித் தேகத்தை வருத்த நேரிடின் விரதத்தில் வெறுப்புத் தோன்றும். இதனால் விரதபலன் இல்லாமல் போய்விடும்" (திருமயிலை சே.வெ. ஜம்புலிங்கம்பிள்ளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, விரதங்களை அநுஷ்டிக்கத் தகுதியானவர்கள் யார், தகுதியற்றோர் யார் என்றொரு கேள்வி எழுகிறது. சுத்த போசனமுடையோராயும் தீக்ஷை பெற்றவர்களாயும், ஆசார சீலர்களாயும் இருப்பவர்களே விரதங்களைக் கைக்கொள்ளத் தகுதியுடையோர் என்று விரதநூல்கள் எடுத்துரைக்கின்றன.

நோயாளர்களும் ஆசௌசமுடையோரும் பாலர்களும், மாதவிலக்கான பெண்களும் விரதம் அநுஷ்டிக்கும் தகைமை இல்லாதவர்கள். இவர்கள் விரதம் கைக்கொள்ள வேண்டுமாயின் தமக்காக வேறொருவரை வரித்துக்கொள்ள வேண்டும். பெண்கள் தம் கணவரை அல்லது மகனை வரித்துக் கொள்ளலாம். நோயாளர், பிள்ளைகளை அல்லது குருமாரைக் கொண்டு விரதத்தை நோற்கலாம். பாலர்களுக்காகப் பெற்றோர் நோற்கலாம். ஆசாரமில்லாதோரும் ஆசௌசமுடையோரும் குருவை வரிக்கலாம்.

இவை விரத அநுஷ்டானங்களுக்கான பொதுவிதிகளாகும். இவற்றோடு சம்பிரதாய பூர்வமாகத் தத்தமது பிரதேசங்களில் நிகழும் நடைமுறைகளையும், குருமூலமாக உபதேசிக்கப்பட்டவற்றையும் சேர்த்து முழுமனதாக விரதங்களை நம்பிக்கையோடு அநுசரிப்பது முறையாகும்.

*ஒரு விரதம் கைக்கொள்ளப்படவேண்டுமானால் அந்த விரதத்தின் நோக்கம் என்ன? அதனை யார் அனுஷ்டிக்கலாம்? எவ்வாறு அதனை மேற்கொள்ளவேண்டும்? எவ்வளவு காலம் அந்த விரதம் இருக்கவேண்டும்? என்ற கேள்விகளுக்கு விடைதெரிந்துகொண்டு, சரியான விளக்கத்துடன், சரியான நோக்கத்துடன், குறித்த ஓர் இலட்சிய விருப்புடன் கைக்கொள்ளவேண்டும். அப்போதுதான் அதன் முழுமையான பலனை அவர்கள் பெறலாம்.*

*இவ்வாறு அக்கறையுடன் செய்ய விழையும் பலருக்கு சரியான வழிகாட்டல்கள் கிடைப்பதில்லை. அதனால், ஆன்மீகத் துறையில் உண்மையான ஆர்வலர்களுக்கு எழுகின்ற ஐயங்கள் சிலவற்றுக்கு விடைகாணமுற்படுகிறது இந்நூல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரணை

உபவாச விரதங்களுக்கு மறுநாள் பாரணைபண்ணுதல் அவசியம். விரதநாளின் மறுநாள் அதிகாலை துயில் நீத்து ஸ்நானம் செய்து நித்திய கர்மானுஷ்டானங்கள் செய்து ஆலயம் சென்று வழிபட்டு வந்து காலை எட்டரை மணிக்குமுன் அடியார்கள் உறவினர்களுடன் பாரணை செய்தல் நன்று.

உரிய நேரத்தில் பாரணை பண்ணுவதற்குத் தடைகள் ஏற்பட்டால் பாரணைக்காகச் சமைத்த உணவைச் சாமிப்படத்திற்கு முன் படைத்து அதனை உரிய நேரத்தில் முகர்ந்து விடுதல் போதுமானது. பின்னர் இயன்ற பொழுதில் சாப்பிடலாம்.

சமையல் தயாராவதிலும் தாமதம் ஏற்படின் சாமிப்படத்திற்கு முன் ஒருசிறு பாத்திரத்தில் நீரெடுத்து வைத்து அதில் துளசியை இரண்டு அடியிலைகளுடன் கூடிய கதிராக எடுத்து அந்த நீரில் இட்டுப் பூஜை வழிபாடு முடிந்ததும் அந்தநீரை உரிய காலத்தில் அருந்திப் பாரணையை நிறைவு செய்யலாம். பின்னர் வசதியானபோது சாப்பிடலாம்.

ஒரு விரதத்தின் முடிவில் அதாவது பாரணை நாளில் இன்னொரு விரதம் வந்தால் இந்த முறையையே கடைப்பிடிக்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இரண்டாவது விரதமும் உபவாசமாக இருந்தால் முதலாவது விரதத்தின் பாரணையைத் துளசிதீர்த்தம் அருந்தி நிறைவேற்றிவிட்டு, இரண்டாவது விரதத்தை முறைப்படி உபவாசமாக அநுஷ்டித்து அதற்கு மறுநாள் பாரணை செய்ய வேண்டும்.

பெரும்பாலும் கேதாரகௌரி நோன்பின் மறுநாள் ஸ்கந்த ஷஷ்டி விரதாரம்பம் அல்லது ஸ்கந்தஷஷ்டி விரதமுடிவில் அதாவது பாரணையன்று சோமவாரவிரதம் வருவதுண்டு. இந்த சந்தர்ப்பத்தில் மேற்கூறிய விதிமுறையே அநுசரிக்கப்படவேண்டும்.

சிலர் உதயத்திற்குமுன் முதல் விரதத்திற்குரிய பாரணையை முடித்து விடுவதுண்டு. ஆனால் சூரியோதயத்திறகு முன் பாரனை செய்தல் விதியன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரத உத்யாபனம்

குறிப்பிட்ட கால எல்லை முடிந்ததும் அதாவது தாம் கைக்கொள்வதாகக் கருதிய வருடம் நிறைவு பெற்றதும் முறைப்படி விரதத்தை முடித்து. விரதபலனைத் தருமாறு வேண்டுதல் செய்தலே விரதோத்யாபனமாகும்.

வீட்டிலே பூஜைவழிபாடுகள் செய்யும்போது தங்கம், வெள்ளி, செம்பு இவற்றில் ஏதாவதொரு உலோகத்தில் சுவாமி திருவுருவத்தைச் செய்து வைத்து ஆவாகனம் செய்து பூஜை நடத்த வேண்டும். அன்று உபவாசமிருந்து மறுநாட்காலை புனர்பூஜையின் பின் (மீண்டும் பூஜை செய்தல்) உத்வாசனம் செய்து அர்ச்சகருக்குரிய தக்ஷிணை தாம்பூலங்களுடன் உலோகப் பிரதிமையையும், கும்பப்பொருட்களையும் வேட்டி சால்வை அரிசி, காய்கறி முதலிய தானங்களையும் வழங்கி இதன்பின் மாஹேஸ்வரபூஜை செய்து (சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல்) தாமும் காலை எட்டரை மணிக்கு முன்னதாகப் பாரணை செய்து விரத பூர்த்தி செய்யலாம்.

விரத உத்யாபன சமயத்தில் பூஜையை ஆரம்பிக்கும்போது "வ்ரதோத்யாபன காலே யதோக்தபல சித்யர்த்தம் விசேஷ பூஜாம் ஆசார்யமுகேன அஹம் அத்ய கரிஷ்யே" (விரதபூர்த்தி காலத்தில் சாஸ்திரத்தில் கூறியபடி விரதத்திற்குரிய பலன்கள் எனக்குச் சித்திக்க வேண்டுமெனக் கருதி இந்தப் பூஜையைச் செய்கிறேன்.) என்று சங்கல்பத்துடன் ஆரம்பித்து முடிவில் அர்ச்சகருக்குரிய தானம் வழங்கும் போது. "ப்ரதிமாம் வஸ்த்ர சம்யுக்தாம் கும்போபகரணைர்யுதாம், துப்யம் தாஸ்யாமி விப்ரேந்த்ர யதோக்த பலதோபவ" (பிரதிமை, வஸ்திரங்கள், கும்பப்பொருட்கள் முதலிய தானங்களை மகிழ்ச்சியுடன் பிராம்மணோத்தமருக்கு வழங்குகிறேன். இவ்விரதத்திற்குச் சொல்லப்பட்ட பலன்கள் எனக்கு உண்டாகட்டும்.) என்று பிரார்த்திக்க வேண்டும்.

பூஜை முடிவில் கும்பத்தால் யஜமானனுக்கு அபிஷேகம் செய்வித்தலும் சொல்லப்பட்டிருக்கிறது. உலோகப் பிரதிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செய்வதற்கு வசதியில்லாதவர்கள் களிமண்ணால் செய்து வழிபட்டபின் அதனை நீர்நிலையில் விட்டு விடலாம்.

விரதோத்யாபன காலத்தில் இவ்வாறு வீட்டில் பூஜைகள் செய்ய வசதியில்லாதவர்கள் ஆலயத்துக்குச் சென்று அபிஷேகம், பூஜை, அர்ச்சனை முதலியன செய்வித்தபின் - அல்லது குறைந்த பட்சம் விரதோத்யாபனத்துக்குரிய சங்கல்பத்துடன் சஹஸ்ர நாமார்ச்சனையாவது செய்து அர்ச்சகருக்குரிய தாம்பூல தக்ஷிணைகள் அரிசி, காய்கறி முதலிய தானங்கள் வழங்கி முன்கூறியவாறு விரதபலனைத் தருமாறு பிரார்த்தித்து விரத பூர்த்தி செய்யலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவ விரதங்கள்

சிவ விரதங்கள் என்று ஒன்பது விரதங்களை
நாவலரவர்கள் எடுத்துரைக்கிறார்.
இவற்றைவிட இன்னும் சில விரதங்களும்
இங்கு இயம்பப்படுகின்றன.
திருமணப்பேறு, மாங்கல்யச் சிறப்பு முதலிய
லௌகீகப் பேறுகளைக் குறித்து
அநுஷ்டிக்கும் விரதங்களும்
இவற்றுள் அடங்குமெனினும்
பொதுவாக ஆன்மீக நலன். வீட்டின்பப்பேறு
என்பனவே சிவ விரதங்களின் முக்கிய
நோக்கங்களாகக் கருதப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமவாரவிரதம்

சோமவாரமென்பது திங்கட்கிழமை. கார்த்திகைமாத முதற் திங்கட்கிழமையில் ஆரம்பித்துத் திங்கட்கிழமை தோறும் அநுஷ்டிக்கப் பெறுவது சோமவாரவிரதம். (கார்த்திகை மாதத் திங்கட்கிழமை மட்டுமே சோமவாரம் என்று தவறாக நினைப்பவர்கள் பலர்.)

இதில் உபவாசம் உத்தமம். இயலாதவர்கள் இரவு ஒரு பொழுது போசனம் செய்யலாம். அதுவுமியலாதவர்கள் பகல் பன்னிரண்டு மணிக்கு மேல் போசனம் செய்க. பகல் முழுவதும் பட்டினியிருந்து மாலை சிவாலய தரிசனம் செய்து வீட்டிலும் விளக்கேற்றி வணங்கியபின் போசனம் செய்தல் பெரும்பாலானோர் கைக்கொள்ளும் முறை. உபவாசமாக இருப்பவர்கள் விரதத்திற்கு முதல் நாள் ஒரு பொழுது உணவுடன் விரதமிருந்து உபவாசத்துக்கு மறுநாள் காலை எட்டரை மணிக்குள் பாரணை செய்ய வேண்டும். பாரணையிலன்று மறுபடி உணவு கொள்வதும் தகாது. இரவில் பால்பழம், பலகாரம் என்பன உண்ணலாம். இது உபவாச விரதங்கள் யாவற்றுக்கும் பொதுவிதி.

இவிரதத்தைப் பன்னிரண்டு வருடமாயினும் மூன்று வருடமாயினும், ஒரு வருடமாயினும் அநுஷ்டித்தபின் உத்யாபனம் பண்ணலாம். வாரந்தோறும் அநுஷ்டிக்க முடியாதவர்கள் கார்த்திகைச் சோமவாரம் மாத்திரம் கைக்கொள்ளலாம்.

ஆபத்துக்களிலிருந்து நம்மைக் காப்பதுடன், நம் முன்னோரை நரகத்திலிருந்து காப்பாற்றும் சக்தியும் இவ்விரதத்துக்குண்டு. சந்திரனின் பெயரால் சொல்லப்படும் வார விரதம் இது, சந்திரன் தோன்றியது கார்த்திகை வளர்பிறை அட்டமி சேர்ந்த ஒரு திங்கட்கிழமையில் தான். அவன் சிவனை ஆராதித்தது, சிரசில் அமர்ந்தது ஆகியனவும் கார்த்திகைச் சோமவார நாட்களில் தான். கிருதயுகம் ஆரம்பமாகியதும் ஒரு கார்த்திகைத் திங்களில் தான்.

சிவாலயங்களில் விசேஷ அபிஷேகங்கள் செய்விப்பதும் தீபமேற்றுதல், மாவிளக்கிடுதல், திலதானம் செய்தல் (எள்ளுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம் செய்தல்) முதலிய நற்காரியங்கள் செய்வது புண்ணியமாகும்.

வீட்டிலே பூஜை செய்ய விரும்புவோர் பதினொரு கும்பம் வைத்து ஏகாதச ருத்திரர்களை ஆவாகனம் செய்து பூசிக்க வேண்டும். தம்பதி பூஜை செய்வதும் சிறந்தது.

நற்குண நற்செய்கைகளும் அறிவாற்றலுமுடைய ஓரளவு வயதான பிராமணத் தம்பதியரை வீட்டிற்கு அழைத்து அவர்களை சிவன் பார்வதியாகப் பாவனை செய்து பூசித்து வணங்கி வேட்டி, சால்வை, புடவை. மஞ்சள், குங்குமம், பொன், நாணயம், தாம்பூலம் என்பவற்றைத் தானமாக வழங்கி உபசரித்தலே தம்பதி பூஜையாகும். தம்பதிகளை வீட்டிற்கு அழைக்க வசதியில்லாதவர்கள் தேர்ந்தெடுத்த தம்பதியரின் வீட்டுக்குப் போய் அவர்களை வணங்கி இத்தானங்களை வழங்கலாம்.

முன்பு ஆர்யாவர்த்த அரசன் மகள் சீமந்தினி இளவயதில் விதவையாக நேருமென்ற சோதிடர் வாக்கை இவ்விரத மகிமையால் பொய்யாக்கினாள். யாஜ்ஞவல்கிய முனிவர் தமது மனைவி மைத்திரேயிக்குக் கூறி அவள் சீமந்தினிக்கு இவ்விரதத்தை உபதேசித்ததாகக் கந்தபுராணத்தில் இவ்விரத மகிமை சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.

சத்தியமீ திவ்விரத விதிகளு மான்மியமும்
　சாற்றுகின்றோம் சோமவா ரத்தின்விதி யுரைக்கில்
நித்தியகார்த் திகைமதியின் முதற்சோம வாரம்
　நிசிபுலர்வை கறையெழுந்து நிமலன்தாள் நினைந்து
சுத்தியுறு நீர்படிந்து நியதிபுரிந் தெங்கோன்
　துணைமலர்த்தாள் அருச்சித்துச் சிவன்தனக்காள் ஆகிப்
பத்திபுரி மறையோரை அவர்மனைவி யுடனே
　பரசிவனும் உமையுமெனப் பாவித்துப் பணிந்தே........

-உபதேசகாண்டம் (ஞானவரோதயர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதிரை விரதம்

மார்கழி மாதத் திருவாதிரை நட்சத்திரத்திலே சபாநாயகரான சிதம்பரேஸ்வரப் பெருமானைக் குறித்து அநுஷ்டிக்கப்படுவது இவ்விரதம். இவ்விரதத்துக்கு விதியாக உபவாசமே சொல்லப்பட்டிருக்கிறது. எனினும் இயலாதவர்கள் சிறிது தளர்த்திக் கொள்ளலாம். பதஞ்சலி, வியாக்ரபாத, முஞ்சிகேச முனிவர்கள் இவ்விரதம் நோற்றுப் பேறுபெற்றனர்.

ஒருவருடத்தில் வரும் ஆறு நடேசரபிஷேகங்களில் இதுவும் ஒன்று. அதிகாலையில் - உதயத்துக்கு முன் ஆர்த்திராபிஷேகம், காலையில் ஆர்த்திரா தர்சனம். ஆர்த்திரா என்பது திருவாதிரை நட்சத்திரம். திருவாதிரை நட்சத்திரத்தில் நடைபெறும் அபிஷேகமும், தரிசனமும் என்ற பொருளில் இவ்விரு நிகழ்ச்சிகளும் சிறப்பானவை.

தாருகாவனத்து முனிவர்கள் கர்ம மார்க்கமே சிறந்ததென்ற கருத்துடன், சிவனையும் புறந்தள்ளி, ஞானமார்க்கத்தையும் நிந்தித்துப் பெரியதொரு வேள்வியை நிகழ்த்தினர். சிவபிரான் பிக்ஷாடனர் வடிவெடுத்து இவர்கள் வீடுகளில் பிக்ஷையேற்றுச் செல்ல இவர் பின்னே ரிஷிபத்தினிகளும் தம்மை மறந்து வீதி வழி செல்லலுற்றனர். இது கண்டு கோபமுற்ற முனிவர்கள் மதங் கொண்ட கொடிய யானை, முயலகன் என்ற பூதம், டமருகம், மான், தீப்பிழம்பு, பாம்பு என்பவற்றை வேள்வியிலிருந்து தோற்றுவித்து அனுப்பினர். சிவபிரான் அவற்றையடக்கி யானையைக் கொன்று அதன் தோலை உரித்து மேலே போர்த்து பாம்பை ஆபரணமாக அணிந்து டமருகம், மான், தீப்பிழம்பு என்பவற்றைக் கரங்களில் ஏந்தி முயலகனை வீழ்த்தி அவன் மீது வலது காலை ஊன்றி நின்று இடது கால் தூக்கி நர்த்தனமாடி முனிவர்களுக்கு உண்மையுணர்த்தினார். இந்த நாளே ஆர்த்திரா தரிசனமாகும்.

இவ்விரத நாளில் விசேஷ நிவேதனமாகக் களி கிண்டி வைப்பார்கள். திருவாதிரைக் களி என்று இதனைக் கூறுவர். களி என்றால் மகிழ்ச்சி என்று பொருள். சிவபிரானுக்குப் பெருமகிழ்ச்சிதரும் உணவாக இது அமைகிறது. தேங்காய்ப்பாலை நன்கு கொதிக்கவிட்டு உப்பும் சேர்த்து அரிசிமா, உழுத்தம்மா இரண்டையும் கலந்து அதனுள் போட்டு கிண்டி இதனைச் செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேந்தனார் என்ற சிவபக்தர் (பட்டினத்தாரின் பணியாளாக இருந்தவர்) சிவனடியாருக்கு அமுதளித்து வருவதைச் சிவ தொண்டாகக் கருதிச் செய்து வந்தார். ஒரு சமயம் சில நாட்கள் தொடர்ந்து மழை பெய்து வந்ததால் உணவு தயார் பண்ண எவ்வித வசதியும் அற்றவராய் இருந்த பொழுது சிவபெருமான் இவரைச் சோதிக்கும் நோக்கில் கிழவேடம் தரித்து வந்து உணவு கேட்டார். சேந்தனார் தம்வசமிருந்த மாவில் களி கிண்டிக் கொடுக்க அதை உண்டு மகிழ்ந்து தம்மை வெளிப்படுத்திய சிவபிரான் அடியவருக்கு நற்பேறு கொடுத்தருளினார். இத்தினமும் திருவாதிரைப் பெருநாளேயாம்.

திருவாதிரை நட்சத்திரம் சிவனுக்குரியது. ஆதிரையான் என்று சிவனைக் கூறுவர். திருவாதிரை நட்சத்திரம் மிகப்பெரியது. சூரியனை விட இரண்டரைக் கோடி மடங்கு பெரியது. இதன் நிறம் சிவப்பு, செம்மீன் எனத் தமிழில் வழங்குவர். இவ்விரு தன்மையாலும் சிவனுக்குரியதாக இதனைக் கொள்ளுதல் பொருத்தமே.

மார்கழித் திருவாதிரையை இறுதி நாளாகக் கொண்ட பத்து நாட்கள் திருவெம்பாவை நோன்பு எனப்படும். இது பற்றி விரிவாக வேறிடத்தில் காண்க.

ஆதரம் பெருகப் படஅர வசைத்த
அண்ணலா திரையயப் படியே
மாதொரு புறஞ்சேர் திங்களங் கண்ணி
வள்ளல்மா விரதநோற் கின்றோர்
பூதலம் அரிய பெரியர்மற் றவர்க்குப்
பொருக்கென இருமையும் மலர்க்கை
மீதுமே வியது சொற்றெனத் துறவீர்
மெய்மையீங் கையமற் றிலையே
-உபதேச காண்டம் (ஞானவரோதயர்)

ஊர்திரை வேலை யுலாவும் உயர்மலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்
-திருஞானசம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமாமகேஸ்வர விரதம்

சைவசமயிகளுடைய ஆன்மிக மேம்பாட்டுக்குச் சிவராத்திரி விரதம் மிகப் பொருத்தமானது. லௌகிக வாழ்கைச் சிறப்புக்கு உமாமகேஸ்வர விரதம் உகந்தது. அம்மையுடன் கூட அப்பனைச் சேர்த்துப் பூசித்து வழிபடும் இவ் விரதம் நற்பதவிகள், நல்ல அந்தஸ்து, ஐஸ்வரியம் என்பவற்றை வழங்கக் கூடியது. கார்த்திகை மாதப் பௌர்ணமி நாளில் கொள்ளப்படுவது இவ்விரதம்.

சிவபிரான் உமாதேவியாருக்கு உபதேசித்த இவ்விரதத்தை தேவி குமாரக் கடவுளுக்கும், அவர் நந்திகேஸ்வரருக்கும், அவர் துர்வாசருக்கும், அவர் அகத்தியருக்கும், அவர் கௌதமருக்கும் உபதேசித்தனர். கௌதம முனிவரிடம் இவ்விரத மகிமையைக் கேட்டறிந்து மஹாவிஷ்ணு, பிரம்மா, சூரியன், சந்திரன் ஆகியோரும் அநுஷ்டித்துப் பேறுபெற்றனர்.

கந்தபுராணம், சிவரஹஸ்யம் ஆகிய நூல்களில் இவ்விரதச் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஒரு சமயம் துர்வாச மகரிஷி பரமசிவனை வழிபட்டபின் அவரால் அநுக்கிரக பூர்வமாக வழங்கப்பட்ட வில்வமாலையையும் பெற்றுக் கொண்டு சென்றார். அப்போது கருடன் மீது பவனிவருபவராக வழியில் எதிர்ப்பட்ட மஹாவிஷ்ணுவிடம் அந்த வில்வ மாலையைக் கொடுத்தார். மாலையின் மகிமையை உணராத மஹாவிஷ்ணு அதனைக் கருடனின் தோள் மீது அலட்சியமாகப் போட்டார். இதைக் கண்டு கோபமுற்ற துர்வாசர், மஹாலக்ஷ்மி விஷ்ணுவிடமிருந்து நீங்கி மீண்டும் பாற்கடலில் போய் விழக்கடவது என்றும் அதனால் யாவும் இழந்து திருமால் கொடிய காட்டில் சஞ்சரிக்கட்டும் என்றும் சாபமிட்டார்.

இவ்விதம் சாபத்தினால் துயருற்றுக் காடுகளில் அலைந்த அவருக்கு கௌதம முனிவர் உமாமகேஸ்வர விரதத்தை உபதேசித்தார். முறைப்படி அதனை அநுஷ்டித்து இழந்தவை யாவும் மீளப் பெற்றார் மஹாவிஷ்ணு.

நித்திய கர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றிய பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டவித்யேஸ்வரர்களுடன் கூடிய உமாமகேஸ்வர கும்பங்களை ஸ்தாபித்து புண்ணியாக வாசனம் முதலிய பூர்வாங்க பூஜைகளுடன் சகலோபசார பூஜையை முறைப்படி செய்யலாம். கும்பத்திற்கு முன் மஞ்சள் மாவினால் ஒரு பிம்பத்தை உருவாக்கி வைத்து (சாணத்தினால் பிள்ளையார் பிடிப்பது போல) அதில் நந்திகேஸ்வரரை ஆவாகனம் செய்து பூஜிக்க வேண்டும்.

பதினைந்து இழைகளினாலான நூலொன்றினை முறுக்கிப் பதினைந்து முடிச்சுக்கள் இட்டு அதனையும் கும்பத்தில் வைத்துப் பூசித்த பின் மணிக்கட்டில் அதனைக் கட்டிக் கொள்ள வேண்டும். அப்பமும் பழமும் மட்டும் இரவு ஒரு நேரம் புசித்தல் முறை. முடியாதவர்கள் பகலில் ஒரு பொழுது போசனம் செய்யலாம்.

பதினைந்து வருடங்கள் தொடர்ந்து இவ்விரதம் கைக்கொள்ள வேண்டும். அதன் பின் உரிய முறைப்படி பிரதிமைகள் செய்து, கும்பம் வைத்துப் பூஜைகள் செய்தோ ஆலயம் சென்று அபிஷேகம் முதலியவற்றை உரிய முறைப்படி சங்கல்ப பூர்வமாகச் செய்தோ விரதபலனைத் தருமாறு வேண்டுதல் செய்து பூர்த்தி செய்யலாம். விரத பூர்த்தியின் போது தம்பதி பூஜை செய்வதும் நன்று. (தம்பதி பூஜை பற்றிய விளக்கம் சோமவார விரதப் பகுதியில் உண்டு.)

திருணபிந்து என்ற முனிவர் தமது கண்பார்வையை இழந்து வருந்தி இவ்விரதமிருந்து கண்பார்வையை மீளப் பெற்றார். சரஸ்வதீ, காயத்திரீ என்ற இரு மனைவியரைப் பிரமதேவன் அடைந்ததும், இந்திரன் சயந்தனை மகனாகப் பெற்றதும், வசிட்டர் காமதேனுவை அடைந்ததும் மிதிலையரசன் சீதையை மகளாகப் பெற்றதும் இவ்விரத மகிமையினால்தான்.

"இத்திறந் திறம்புறா தியல்பின் நோற்றவர்
புத்திர ரொடும்வளம் பொருந்தி வாழ்ந்து பின்
அத்தகை யவரொடும் அமர ரேத்தப்போய்
முந்திசென் றடைந்தவர் முதல்வ ராகுவார்."

- உபதேச காண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி விரதம்

சிவபரம்பொருளையே முழுமுதற் கடவுளாகக் கொண்டொழுகும் சைவர்களுக்கு மிகமுக்கியமான விரதம் சிவராத்திரியாகும். லௌகீக இன்பங்களை மட்டும் இச்சித்து வழிபடுவதன்றி ஆன்ம லாபத்தை நாடி - நிலையாமையை உணர்ந்து இம்மை மறுமை என்ற இருமைக்கும் பயன்தரும் இந்த மஹாசிவராத்திரி விரதத்தைக் கைக்கொள்ளவேண்டியது ஒவ்வொரு சைவ சமயியினதும் கடமை.

சிவராத்திரி விரதத்தை யாதொரு பலனையும் விரும்பாதவரும் - வைஷ்ணவருங்கூட - அநுஷ்டிக்கவேண்டுமென்று கருடபுராணம் முதலிய பல புராணங்கள் கூறுகின்றன.

மாசிமாதத் தேய்பிறைச் சதுர்த்தசியிலே சிவராத்திரி விரதம் கைக்கொள்ளப்படுகிறது. பகல் திரயோதசியிருந்து இரவு சதுர்த்தசி வியாபித்திருத்தல் விசேஷமானது. திரயோதசி சக்திஸ்வரூபம். சதுர்த்தசி சிவஸ்வரூபம். பாரணையின்போதும் சதுர்த்தசி இருக்குமாயின் நன்று.

மாதசிவராத்திரி என்ற பெயரில் மாதந்தோறும் சிவராத்திரி விரதங்கள் வருகின்றபோதும் அவை அநுஷ்டிக்கப்படுவது குறைவு. நான்கு வகையான சிவராத்திரிகளைப் பற்றி உபதேச காண்டம் கூறுகிறது. அமாவாசையும் சோமவாரமும் கூடியதினத்தில் வருவது **யோகசிவராத்திரி**. மாதந்தோறும் தேய்பிறைச் சதுர்த்தசியில் வருவது **மாதசிவராத்திரி**. மாசிமாதம் வளர்பிறைப் பிரதமை முதல் தேய்பிறைத் திரயோதசி வரை பகலில் மட்டும் உணவருந்தி மறுநாள் சதுர்த்தசியில் அதாவது மஹாசிவராத்திரி விரதநாளில் உபவாசமிருந்து நித்திரை விழித்தல் மூன்றாவது வகை. **மஹாசிவராத்திரி** நான்காவது.

திருநந்திதேவரிடம் இவ்விரதத்தை உபதேசமாகப் பெற்றுச் சூரியன், முருகன், விஷ்ணு, பிரம்மா, மன்மதன், யமன், இந்திரன், சந்திரன், அக்கினி, குபேரன் ஆகியோர் கைக்கொண்டு பல்வேறு வரங்களைப் பெற்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜசேகர பாண்டியமன்னன் வெள்ளியம்பலத்தில் சிவபெருமானுக்குச் சிவராத்திரியில் நான்குயாமப் பூஜைகளையும் மிக விசேடமாகச் செய்வித்து, தொடர்ந்து ஒரேகாலை ஊன்றி ஆடக் கால் நோகுமே என்று வேதனை கொண்டு இறைவனை வேண்டிக் கால்மாறி ஆடச்செய்து பேரானந்தமடைந்தான் என்று திருவிளையாடற் புராணம் கூறும்.

சிவபெருமானே உமாதேவியாருக்கு உபதேசித்த இவ்விரத மகிமையைச் சூதபுராணிகர் ஏனைய முனிவர்களுக்கு எடுத்துக் கூறுவதாகப் புராணங்கள் புகலும். கந்தபுராணம், லிங்கபுராணம் சிவமகாபுராணம், பிரம்மோத்திர காண்டம் முதலியவற்றில் விரிவாகப் பேசப்படும் இவ்விரதத்தின் சிறப்பை எடுத்துரைக்க ஒரு தனியான புராணத்தையே ஆக்கியிருக்கிறார் நம் நாட்டவரொருவர்.

சுன்னாகம் வரதபண்டிதரவர்கள் இயற்றிய இந்தச் சிவராத்திரிப் புராணமானது பல இடங்களில் சிவராத்திரி நாட்களில் படனம் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. வாதுளம் முதலிய ஆகமங்களிலும் சில உபாகமங்களிலும் இதன் சிறப்புக்கள் எடுத்தோதப்படுகின்றன.

ஒரு சமயம் படைப்புக் கடவுளாகிய நான்முகனும் காத்தற் கடவுளாகிய திருமாலும் தானே பெரியவன், தானே பெரியவனென்று தம்முள் வாதிட்டு நின்றனர். இவ்வேளை அவர்களருகே ஓர் அக்கினிப் பிழம்பு தோன்றியது. ''இவ்வக்கினியின் அடியையாவது முடியையாவது கண்டு வருபவனே பெரியவன்'' என்று ஓர் அசரீரி முழங்கியது.

உடனே பிரம்மா அன்னப் பட்சியாக மாறி வானத்தில் பறந்து முடியைத் தேடிப் புறப்பட்டார். விஷ்ணு பன்றி வடிவெடுத்து நிலத்தைத் தோண்டிக் கீழே புகுந்து அவ்வக்கினியின் அடியைத் தேடிப் புறப்பட்டார். நீண்டகாலம் முயற்சித்து முடியாமல் தோல்வி கண்டு இருவரும் திரும்பினர்.

தாம் வெறும் கருவிகளேயென்றும் தம்மை இயக்கும் ஒரு மேலான பரம்பொருள் உண்டு என்றும் அதுவே சிவபரம்பொருள் என்றும் உணர்ந்து அவ்வக்கினிக் கொழுந்தின் முன் அவர்களிருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டியிட்டு நின்றனர். அவர்கள் செருக்கையடக்கிய சிவபிரான் அவர்களுக்கு அருள்புரிந்ததுடன் அந்தச் சோதி வடிவம் தோன்றிய நாளை சிவராத்திரி விரத நாளாக அநுஷ்டிக்குமாறும் கூறினார்.

காட்டிற்கு வேட்டையாடச் சென்ற வேடனொருவன் வழிதப்பிப் போய், இருட்டிவிட்ட காரணத்தால் தடுமாறிக் கொண்டிருந்தான். இரவுப் பொழுதைப் பாதுகாப்பாகக் கழிப்பதற்காக ஒரு மரத்தின் மீது ஏறியிருந்தான். தான் தூங்கி விட்டால் மரத்திலிருந்து கீழே விழுந்து ஏதாவது துஷ்டமிருகங்களுக்கு இரையாகிவிட நேரும் என்பதால் மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான்.

அன்றைய தினம் சிவராத்திரி என்பதும், அவன் ஏறியிருந்த மரம் ஒரு வில்வமரம் என்பதும், கீழே இருந்த ஒரு சிறிய சிவலிங்கத்தின் மேல் அவன் பறித்துப் போட்ட வில்வமிலைகள் விழுந்தன என்பதும் அந்தப் பாமரனுக்குத் தெரியாது. ஆனால் வேட்டைத் தேடி அலைந்ததில் பகல் முழுவதும் உணவின்றியிருந்து இரவில் தூக்கமின்றி விழித்திருந்து சிவலிங்கத்துக்கு வில்வமிலையால் அர்ச்சித்த படியால் அவனுக்கு முத்தியின்பம் கிட்டிற்று. அறியாமல் செய்த நற்காரியத்துக்கே இப்பேறு கிட்டிற்றென்றால் அறிந்து செயற்படும்போது கிட்டும் பேறு எவ்வளவு?

இவ்வித மகிமை பொருந்திய நாளில் முறைப்படி நித்திய கர்மாநுஷ்டானங்களைச் செய்து சிவாலயம் சென்று உபவாசமிருந்து இரவு முழுவதும் தூக்கம் ஒழித்து. சிவநாம பஜனை, பஞ்சாக்ஷரஜபம் முதலியவற்றில் ஈடுபட்டிருந்து மறுநாள் அதிகாலை நித்திய கருமம் முடித்து எட்டரை மணிக்கு முன் பாரனை செய்வது விதியாகும்.

சிவராத்திரி இரவு நான்கு யாமமும் சிவபூஜை, சிவலிங்க வழிபாடு அவசியம். நான்கு யாமப் பூஜைகளும் அவ்வக் காலத்தில் செய்வது உத்தமம். ஒரே காலத்தில் சேர்த்துச் செய்வது மத்திமம். நான்கு யாமப் பூஜைகளின்போது பரிவார பூஜைகளில் விநாயகருக்கும், சண்டேஸ்வரருக்கும் மட்டும் பூஜை செய்தால் போதும். ஏனைய பரிவாரங்களுக்குப் பூஜை அவசியமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்த காலம் அதாவது சுமார் 11.30 மணிமுதல் 12.15 வரையிலான காலம் லிங்கோற்பவ காலமாகும். இரவு முழுவதும் விழித்திருக்க முடியாதவர்கள் லிங்கோற்பவ காலம் முடியும்வரையாவது விழித்திருத்தல் நன்று.

"மஹாசிவராத்திரி விரதத்தைப் பற்றிப் பேசுபவருக்கு யமபயம் இல்லை. பல யாகங்களைச் செய்வதைக் காட்டிலும் இவ்விரதத்தை அநுஷ்டிப்பது மிகவும் புண்ணியமாகும். சிவராத்திரி விரதத்தால் கிடைக்கும் நற்பயன் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடினாற் கூடக் கிட்டாது. சிவராத்திரிக்கு ஒப்பான வேறு சிறந்த விரதம் இல்லை" என்று பரமசிவன் பார்வதிக்கு இவ்விரதம் பற்றி எடுத்துரைத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

இவ்விரதம் இருபத்துநான்கு வருடங்கள் அல்லது பன்னிரண்டு வருடங்கள் அல்லது ஆறு வருடங்களாவது தொடர்ந்து அநுஷ்டித்த பின் முறைப்படி விரத பூர்த்தி செய்து கொள்ளலாம்.

"மறைகளிற் சாமம் மகங்களிற் புரவி
மலைகளில் மக மேரு
திறைபுனல் நதியிற் கங்கை ஓர் ஐந்தாய்
நிகழ்ந்த பூதத்தில் ஆகாயம்
முறைதெரி சுரரிற் கருமுகில் ஊர்தி
முதன்மைபெற் றுயர்ந்ததே போல
அறைதரு விரதம் அனைத்தினும் உரைக்கும்
அரன்இரவு அதிகம் என்றறிமின்"

"முத்தியினை விரும்பிமுற்ற சங்கற்பம்
தவறாது மூவெட்டாண்டு
பத்தியுடனிவ்விரத நோற்றதன்பின்
வேதியர்க்குப் பசுப்பூ தான
நித்தில்வெண் ணகைக்கன்னி காதான
மன்னமுடனிதய நல்கி
புத்தியுடன் சிவநிசியாம் விரதமொழிவது
வழக்காப் புகல்வன் மன்னோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேதாரேஸ்வர விரதம் (கேதாரகௌரி விரதம்)

கேதார கௌரி விரதம் என்ற பெயரால் அழைக்கப்படும் இவ்விரதம் அம்பிகையை நோக்கி அநுஷ்டிக்கப்படும் சக்தி விரதங்களுள் ஒன்றாகும் என்ற தப்பபிப்பிராயம் இவ்விரதத்தின் பெயர்க் காரணமாகப் பலரிடையே நிலவுவதுண்டு. திருக்கேதார நாதராகிய கேதாரேஸ்வரப் பெருமானை அத்தலத்து நாயகியாகிய கேதாரகௌரி அம்பாள் பூஜித்து வழிபட்ட விரதமாகையால் இவ்விரதத்துக்கு இப்பெயர் வந்தது. இது உண்மையில் சிவலிங்கப்பெருமானைக் கருதி அநுஷ்டிக்கும் ஒரு சிவ விரதமாகும்.

இன்று மிகப் பலரால் கைக்கொள்ளப்பட்டுவரும் பிரபலமான ஒரு விரதமாக இது இருப்பதால் இந்த விரதத்தின் கதை, கைக்கொள்ளும் முறை முதலியவற்றைச் சரியான முறையில் பலரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இவ்விரதம் சூதபுராணிகரால் சௌநகர் முதலிய ஏனைய முனிவர்களுக்குச் சொல்லப்பட்டது.

கேதாரகௌரி விரத மகிமையானது சிந்தியம் என்னும் சிவாகமத்திலும் பவிஷ்யோத்தரம் என்னும் மஹாபுராணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரதத்தை 21 தடவை அனுட்டிப்போர் இம்மையில் செல்வ போகங்கள் அனுபவித்து மறுமையிலும் சிவசாயுச்சியம் அடைவார்கள் என்பது திண்ணம்.

ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையில் முடிவுறும் இருபத்தொரு நாள் விரதம் இது. பெரும்பாலும் புரட்டாதி மாத வளர்பிறை நவமி அல்லது அதற்கு முதல் நாள் அல்லது அதற்கு அடுத்த நாள் ஆரம்பமாகும்.

சிவபெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கும் கைலாச மலையானது மின்னல்கொடிக் கூட்டங்களும் சரத்கால மேகங்களும் சூழ்ந்து விளங்குவது. பல்வேறு பூஞ்செடி கொடிகளும் பழமரங்களும் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருப்பது. அங்கே யோகியர், சித்தர், கின்ரர், கிம்புருவர், யக்ஷர், தேவர், கந்தர்வர் முதலியோரால் சேவிக்கப்பட்டவராகவும் இந்திராதி தேவர்களாலும் முனிகணங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழப்பட்டவராகவும் பார்வதி சமேதராகப் பரமேஸ்வரர் வீற்றிருந்து அருள்பாலித்துக்கொண்டிருப்பார்.

இத்தகைய திருக்கைலாயத்திலே முன்பொரு சமயம் வசந்த மண்டபத்திலே பார்வதி சமேதராகப் பரமசிவன் வீற்றிருக்கும் போது இந்திராதி தேவர்களும், முனிசிரேஷ்டர்களும் கூடி நின்று தரிசித்தனர். நாரதர் முதலியோரின் இன்னிசையும், ஊர்வசி முதலிய தேவலோக நாட்டியப் பெண்களின் நடனமும் நடைபெற்றன.

தும்புரு நாரதர் வீணாகானம் செய்து பாடவும் நந்தி மத்தளம் கொட்டவும் ரம்பை, மேனகை போன்றோர் நடன விருந்தளிக்கவும் ஆனந்த கோலாகலமாக அந்தக் கைலையங்கிரி விளங்கியது.

அப்போது சிவபக்தரான பிருங்கிமுனிவரும் அங்கு வந்திருந்து ஆனந்த மயமான ஒரு விகடக் கூத்தினை ஆடிக் காட்டினார். இதன் பின் தீவிர சிவபக்தரான அம்முனிவர் பார்வதியை விட்டுச் சிவனை மட்டும் தனியாக வலம் வந்து வணங்கினார். இதைக் கண்டு வியப்புற்ற பார்வதி பரமசிவனிடம் அதன் காரணத்தை வினவினார். அதற்கு அவர்,

''சிவத்திற்கும் சக்திக்குமுள்ள உறவு உயிருக்கும் உடலுக்கும் உள்ள உறவு போன்றது. தேகப்பற்றை நீக்கி அதிபக்குவ மடைந்தவர்கள் உடலைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அக்கருத்தினால் - உயிர் விஷயத்தில் மட்டும் பற்றுள்ளவராதலால் - சக்தி பற்றிய அக்கறையின்றி உயிராகிய சிவத்தை மட்டும் வழிபடுவாராயினார்'' என்று விளக்கமளித்தார்.

"அப்படியானால் இந்த முனிவருக்குத் தேக வலுவாகிய சக்தி எதற்கு? " என்றெண்ணிய அம்பிகை அவரது உடல் வலிமையையும் ஊன் உதிரப் பசையையும் முற்றாக விலக்கி விட்டார். அவர் வெறும் எலும்பும் தோலுமாகி, இயங்கும் ஆற்றலின்றித் தடுமாறினார். அவர் மீதிரங்கிய சிவபிரான் அவருக்குத் தண்டொன்று கிடைக்கச் செய்தார். அதனை ஊன்றி ஒருவாறு இயங்கலானார் பிருங்கி முனிவர்.

அக்கணமே அவ்விடம் விட்டகன்ற பார்வதி கௌதம முனிவரது ஆஸ்ரமத்திற்குச் சென்று அங்கோர் வில்வமரத்தடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்றிருந்தார். பன்னிரண்டு ஆண்டுகள் மழை இல்லாத காரணத்தால் வாடிக்கிடந்த அப் பூங்காவானது உடனே துளிர்களும் பூக்களும் கனிகளும் குலுங்கும் செழிப்பான வனமாக மாறியது. மல்லிகை, முல்லை, புன்னை, பாதிரி, சம்பகம், பாரிஜாதம் முதலிய நானாவித புஷ்பங்களின் வாசனை நாலாதிக்கிலும் நெடுந்தூரம் பரவியது.

இவ்வதிசயத்தை அவதானித்த கௌதம முனிவர் அவ்வனமெங்கும் தேடி ஆராய்ந்தபோது ஒரு வில்வமரத்தருகே வீற்றிருக்கின்ற அன்னையைக் கண்டு ஆனந்த பரவசமடைந்தார். மெய்சிலிர்ப்பக் கண்ணீர் சொரியச் சிரமேற் கைகுவித்து அஞ்ஜலி செய்து அம்பிகையின் பாதங்களில் வீழ்ந்து வணங்கியபின்,

"அன்னையே, யான் செய்த பெருந்தவம்தான் என்னே! தாங்கள் கைலாயத்தை விட்டு இங்கு வந்து அடியேனின் பூங்காவனத்தில் காட்சிதரும் மகிமை என்னவென்பது? நான் பாக்கியம் செய்தவன்" என்று கூறி மகிழ்ந்து,

"இவ்விதம் எழுந்தருளக் காரணம் யாதோ?" என்று கேட்டதும் பராசக்தி கைலாயத்தில் நடந்த விருத்தாந்தங்கள் யாவும் கூறி,

"என் அனக் கொதிப்பு அடங்கிச் சாந்தம் அடையவும் இஷ்டசித்தி பெறவும் கருதி இங்கே தவம் செய்ய எண்ணினேன்" என்றாள். முனிவர் தேவியைத் தமது ஆச்சிரமத்துக்கு அழைத்து உபசரித்து மகிழ்ந்தார். அப்போது அம்பிகை,

"யாம் பரமேஸ்வரனோடு ஒரே உருவில் சரிபாதியாய்ப் பொருந்த வேண்டும். அதற்குரிய ஒரு நோன்பினை நான் நோற்க வேண்டும்." என்று தம் விருப்பத்தைத் தெரிவித்தார்.

முனிவர் கேதார கௌரி விரதத்தைப் பார்வதிக்கு எடுத்துரைக்கப் பார்வதியும் கேதாரம் என்ற தலத்தில் முறைப்படி அவ்விரதம் கைக்கொண்டு இருபத்தோராம் நாள் காப்புக் கயிறணிந்து நமஸ்கரித்து எழுந்ததும் இடபாரூடராகப் பரமேஸ்வரன் காட்சிதந்து

"தேவீ உனக்கென்ன வரம் வேண்டும்?" என்று கேட்க,

"உமது சரீரத்தில் பாதி எனக்கு வேண்டும்" எனட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தித்தாள். உடனே இறைவன் இறைவியைத் தம்மிடம் அழைத்து அர்த்தநாரீஸ்வரர் ஆகி உலகுக்குக் காட்சி கொடுத்தார்.

"இன்றுமுதல் பூவுலகில் யார் இந்த விரதத்தை அனுஷ்டிக்கின்றார்களோ அவர்களுக்கு விரும்பிய பாக்கியத்தைக் கொடுப்போம்" என்று கூறி மறைந்தார். இதன்பின் தேவர்கள் முனிவர்கள் பலரும் நோற்று இஷ்டசித்திகளைப் பெற்றுவந்தனர்.

புரட்டாதி மாதச் சுக்கிலபட்சத் தசமி தொடக்கம் ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்சத் தீபாவளி அமாவாசை வரை இருபத்தொருநாள் அனுஷ்டிக்கும் விரதம் இது.

உஜ்ஜயினி என்ற நாட்டு மன்னர் வச்ரதந்தன் என்பவன் சித்திராங்கதன் என்ற சிவபக்தன் வாயிலாக இவ்விரத மகிமையை அறிந்து. அநுஷ்டித்து பேறு பெற்றான்.

ஒருமுறை கங்கைக்கரையில் தேவகன்னியர் சிலர் இதனை நோற்றுக்கொண்டிருந்தனர். அப்பொழுது புண்ணியவதி, பாக்கியவதி என்ற இரு பெண்கள் அங்கு வந்து சேர்ந்தனர். இப்பெண்களின் தந்தையார் ஒருகாலத்தில் அரசராயிருந்தவர். இடையில் பகையரசர்களிடம் நாட்டையிழந்து காட்டுக்கு வந்து குடிசை அமைத்து ஆண்டி வாழ்வு வாழ்ந்தார். அவரது புதல்விகளும் திருமணம் செய்வார் யாபருமின்றித் தந்தையுடன் வாழ்ந்து வந்தனர். கங்கைக் கரைக்கு வந்த புண்ணியவதி, பாக்கியவதி என்ற அந்த இரு சகோதரிகளும் கேதாரகௌரி நோன்பினை மேற்கொண்டிருந்த தேவமாதரைச் சந்தித்து விபரமறிந்து அவர்கள் கொடுத்த நோன்புக் கயிற்றையும் பிரசாதத்தையும் பெற்றுத் திரும்பினர். அப்போது அவர்களது ஓலைக் குடிசை மாளிகையாக மாறியிருந்தது. பொன்னும் பொருளும் அங்கு நிறைந்திருந்தன. இறைவனின் கருணையை எண்ணி வியந்தவாறு இன்பமாக வாழ்ந்தனர். இப்படி வாழும் நாளில் ராஜகிரி நாட்டு மன்னன் புண்ணியவதியையும் அழகாபுரி நாட்டு மன்னன் பாக்கியவதியையும் மணந்து தத்தம் நாட்டுக்கு அழைத்துச் சென்றனர். இருவரும் இன்பமாக வாழ்ந்தனர்.

இவர்களுள் பாக்கியவதி தனது செல்வச் செருக்கினால் இவ்விரதத்தை மறந்து கைவிட்டவளானாள். இதனால், இவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனாகிய அரசகுமாரன் பகையரசர்களாற் தோற்கடிக்கப்பட்டு விடவே இவர்கள் நாடு கடத்தப்பட்டனர். அங்கு ஓர் ஓலைக்குடிசையில் கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தனர். இந்நிலையில் தன் கையிலிருந்த நோன்புக் கயிற்றைக் கவனமில்லாமல் அறுத்து வீச அது முற்றத்திலிருந்த அவரைக் கொடிப் பந்தரில் வீழ்ந்தது.

புண்ணியவதியோ தொடர்ந்து இந்தக் கேதாரகௌரி நோன்பைக் கைக்கொண்டு செல்வச் சுகத்துடன் வாழ்ந்து வந்தாள். பாக்கியவதி தனது கஷ்ட நிலையைத் தெரிவித்துப் புண்ணியவதியிடம் ஆள் அனுப்பி உதவி கோரினாள். பாக்கியவதி நோன்பைக் கைவிட்டதனால்தான் இக்கதி நேர்ந்ததென உணர்ந்த புண்ணியவதி அவளுக்கு வேண்டிய உதவிகள் செய்ததோடு விரதத்தை மறுபடி கைக்கொள்ளுமாறு ஆலோசனையும் கூறி அதற்கான வழிவகைகளும் செய்து கொடுத்தாள்.

தன்வீட்டு முற்றத்திலிருந்த அவரைக்கொடி தான் வீசிய நோன்புக்கயிறு காரணமாக மிகவும் செழித்து வளர்ந்து அளவுகணக்கின்றிக் காய்த்து நிற்றலைக் கண்டு. நோன்புக் கயிற்றின் பெருமையை உணர்ந்த பாக்கியவதி கேதாரகௌரி விரதச் சிறப்பையும் தெரிந்து கொண்டாள். தான் செய்த தவறுக்கு மனம் வருந்திச் சகோதரியின் சொற்படி மீண்டும் விரதமிருந்து அதன் மூலம் மீண்டும் தமது இராச்சியத்தையடைந்து மகிழ்வுற்றிருந்தாள்.

வீட்டிலே இதற்கென அமைத்த தூய்மையான இடத்தில் அல்லது சுவாமி அறையில் அல்லது வில்வமரத்தடி போன்ற பொருத்தமான இடங்களில் அல்லது ஆலயங்களில் இவ்விரத பூஜையை நடத்தலாம். மண்ணினால் சிவலிங்கம் செய்து அதில் கேதாரேஸ்வரப் பெருமானைப் பூர்வாங்க பூஜைகளுடன் முறைப்படி ஆவாஹனம் செய்து விசேஷ அபிஷேகம் பூஜைகளை நடத்துதல் முறை, கும்பம் வைத்து அதிலேயும் ஆவாஹனம் செய்து பூஜிக்கலாம்.

எள்ளுருண்டை, மஞ்சளுருண்டை, அதிரசம் (அரியதரம்), வாழைப்பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு என்பவற்றை வகைக்கு ஒன்றாகத் தினமும் நிவேதனம் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் முழுவதும் பட்டினியிருந்து சாயங்காலத்தில் இந்தப் பூஜையைச் செய்தபின் நிவேதனங்களை மட்டும் உண்டு பூஜைக்குப் பயன்படுத்திய தீர்த்தத்தை அருந்தி வரவேண்டும்.

இருபத்தோரிழைகள் கொண்ட பட்டு நூல் ஒன்றை முறுக்கி லிங்கம் அல்லது கும்பத்தின் மீது வைத்துப் பூஜை முடிவில் வலம் வந்து வணங்கியபின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முடிச்சு இடவேண்டும். இருபத்தோராம் நாள் இக்காப்புக் கயிற்றினைத் தமது முன்கையிலோ புயத்திலோ, கழுத்திலோ தரித்துக் கொள்ள வேண்டும்.

அடுத்த வருடம் விரத நாளில் இவ்வாறு புதிய காப்புக் கயிற்றினைக் கட்டும்போது பழைய கயிறு விலக்கப்பட வேண்டும். பின்னர் இக் கயிறு, பூசித்த மண்லிங்கம் என்பவற்றைப் புண்ணிய தீர்த்தத்திலே (நீர் நிலைகளில்) விட்டுவிட வேண்டும்.

இறுதி நாளாகிய இருபத்தோராம் நாள் பூரண உபவாசமிருந்து மறுநாள் அதிகாலையில் பாரணை செய்தல் முறை. இருபத்தொரு நாளும் விரதமிருக்க வசதியில்லாதவர்கள் இறுதி நாளாகிய ஐப்பசி மாத அமாவாசை நாளாகிய கேதாரகௌரி விரத நாளில் இந்த விரதமிருக்கலாம்.

இத்தினத்தில் காலையில் ஸ்நானம் செய்து சந்தியாவந்தனம் முடித்துப் பூரண உபவாசமாக இருக்க வேண்டும். மாலையில் சிவலிங்கம் அல்லது கும்பத்தில் கேதாரேஸ்வரரை ஆவாஹனம் செய்து முறைப்படி பூஜை செய்ய வேண்டும். அதிரசம், சர்க்கரை உருண்டை, சந்தன உருண்டை, மஞ்சள் உருண்டை, வெற்றிலை, பாக்கு என்பவற்றை ஒவ்வொன்றிலும் இருபத்தொரு எண்ணிக்கை வைத்து மற்றும் பழவகை தேங்காய் என்பவற்றையும் நிவேதனம் செய்ய வேண்டும்.

இருபத்தொரு இழை கொண்ட பட்டு நூல் கயிற்றைக் கையிலே கட்டுதற்கேற்ற அளவில் எடுத்து அதில் இருபத்தொரு முடிச்சுகள் இட்டு அதனைக் கும்பத்திலே வைத்து அந்த இருபத்தொரு முடிச்சுகளையும் உரிய முறைப்படி பூஜிக்க வேண்டும். அதற்கான நாமங்கள் வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஓம் சிவாய நம: -- ப்ரதம க்ரந்திம் பூஜயாமி
2. ஓம் சாந்தாய நம: -- த்விதீய க்ரந்திம் பூஜயாமி
3. ஓம் மஹாதேவாய நம: --- த்ருதீய க்ரந்திம் பூஜயாமி
4. ஓம் வ்ருஷபத்வஜாய நம: -- சதுர்த்த க்ரந்திம் பூஜயாமி
5. ஓம் கௌரீசாய நம: -- பஞ்சம க்ரந்திம் பூஜயாமி
6. ஓம் ருத்ராய நம: -- ஷஷ்ட க்ரந்திம் பூஜயாமி
7. ஓம் பசுபதயே நம: -- சப்தம க்ரந்திம் பூஜயாமி
8. ஓம் பீமாய நம: -- அஷ்டம க்ரந்திம் பூஜயாமி
9. ஓம் த்ரியம்பகாய நம: -- நவம க்ரந்திம் பூஜயாமி
10. ஓம் நீலலோகிதாய நம: -- தசம க்ரந்திம் பூஜயாமி
11. ஓம் ஹராய நம: -- நவம க்ரந்திம் பூஜயாமி
12. ஓம் ஸ்மரஹராய நம: -- ஏகாதசம க்ரந்திம் பூஜயாமி
13. ஓம் பவாய நம: -- த்ரயோதச க்ரந்திம் பூஜயாமி
14. ஓம் சம்பவே நம: -- சதுர்த்தச க்ரந்திம் பூஜயாமி
15. ஓம் சர்வாய நம: -- பஞ்சதச க்ரந்திம் பூஜயாமி
16. ஓம் சதாசிவாய நம: -- ஷோடச க்ரந்திம் பூஜயாமி
17. ஓம் ஈஸ்வராய நம: -- ஸப்ததச க்ரந்திம் பூஜயாமி
18. ஓம் உக்ராய நம: -- அஷ்டாதச க்ரந்திம் பூஜயாமி
19. ஓம் ஸ்ரீகண்டாய நம: -- ஏகோநவிம்சதி க்ரந்திம் பூஜயாமி
20. ஓம் நீலகண்டாய நம: -- விம்சதி க்ரந்திம் பூஜயாமி
21. ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம:-- ஏகவிம்சதி க்ரந்திம் பூஜயாமி

ஓம் கேதாரேஸ்வராய நம: -- நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி சமர்ப்பயாமி.

பூஜை, பிரார்த்தனை, பிரதக்ஷண நமஸ்காரம் என்பன முடிந்ததும் உத்வாசனம் பண்ணிவிட்டுக் காப்புக் கயிற்றைக் கட்ட வேண்டும். கட்டும்போது சொல்வதற்குரிய ஸ்லோகம்:-

"ஆயுஸ்ச வித்யாம்ச ததா சுகம்ச
ஸௌபாக்ய வ்ருத்திம் குரு தேவதேவ
சம்ஸார கோராம்பு நிதௌ நிமக்னம்
மாம் ரக்ஷ கேதார பதே நமஸ்தே.

மறுநாள் அதிகாலை காலைக்கடன்கள் நிறைவேற்றியபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகேஸ்வர பூஜை செய்து காலை எட்டரை மணிக்கு முன் பாரணை செய்ய வேண்டும். இவ்விரதம் இருபத்தொரு வருடம் கைக்கொள்ளப்பட வேண்டுமென்பது சாஸ்திர விதி. இயலாதவர்கள் ஏழுவருடமாவது அநுஷ்டிக்க வேண்டும்.

ஐந்து மாதத்துக்கு மேற்படாத கர்ப்பிணிப் பெண்களும், மாதவிலக்கு நின்று விட்ட பெண்களும், தொடர்ந்து இருபத்தொரு நாளும் இவ்விரதம் அநுஷ்டிக்கலாம். இடையில் மாதவிலக்கு நேரக் கூடுமாயின் ஏனைய பெண்கள் இறுதி 9, 7, 4, 3, நாட்கள் கைக் கொள்ளலாம். ஆண்களும் இவ்விரதம் அநஷ்டிக்கலாம்.

முறைப்படி இத்தனை வருடம் இவ்விரதத்தை இன்ன முறைப்படி அநுஷ்டிக்கப் போகிறேன் என்று சங்கல்பித்து உரியகாலம் முடிந்ததும் விரதோத்யாபனம் செய்ய வேண்டும்.

வீட் டில் வைத்துச் செய்வதானால் கும்பம் வைத்து கேதாரேஸ்வரரின் உருவப்பிரதிமையை பொன், வெள்ளி, செம்பு என் ஏதாவதொரு உலோகத்தில் செய்து வைத்து முன்பு கூறிய முறைப்படி பூஜைகளைச் செய்ய வேண்டும். மறுநாள் காலை மீண்டும் பூஜைகள் செய்து விரத பலனைத் தருமாறு பிரார்த்தித்து உருவப் பிரதிமை, வேட்டி சால்வை மற்றும் தானங்கள் வழங்கிய பின் பாரணை செய்ய வேண்டும். அவ்விதம் செய்ய வசதியற்றவர்கள் ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து விரத பலனைத் தரும்படி பிரார்த்தித்து தானங்களை வழங்கி விரத பூர்த்தி செய்யலாம்.

தம்பதிகளுக்கு மகிழ்ச்சியான இல்லற வாழ்வும், நன்மக்கட்பேறும் கன்னியர்க்கு நன்மணப் பேறும், இவ்விரத பலனாகும்.

"குழைத்த வெண்திசைப் புனல்படிந்து அரனடி குறுகா
இழைத்த தந்துவி னேழு மூன்றிடக்கரந் தரித்துக்
குழைத்த வெண்கதிர் பரிதிபோய்க் குரைக்கடற் குளிப்ப
இழைத்த சிந்தையி னோர்பொழு தயின்றுற வேண்டும்"

---உபதேச காண்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக் காப்புப் பாடல்

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்றருள்வாய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்றமோடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமல் கா

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதேவியே
கொடிய மகிஷாசுரரைக் கூறுபோட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே வீழ்த்தான் சிவனவனும்
அம்மா உனையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே வாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுத் தலைவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏரலின்னி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்பு கட்டிவிட்டுக் கடமை முடிந்த தென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனத்துடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

சுபம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யான சுந்தர விரதம்
# (பங்குனி உத்தரம்)

சிவபிரானைக் கல்யாணசுந்தர மூர்த்தியாக வழிபட்டு பங்குனி உத்தர நாளில் அநுஷ்டிக்கப்படும் விரதம் இது. பங்குனி மாதத்தில் பூமி மீனராசியில் நிற்க சந்திரன் உத்தர நட்சத்திரத்துடன் கன்னி ராசியில் நின்று பூரண கலை பெற்று ஏழாம் பார்வையாகப் பூமியைப் பார்ப்பதால் இத்தினம் விசேடமானது.

மதுரையில் மீனாட்சியம்மையைச் சுந்தரேசப் பெருமான் திருமணம் செய்த நாள் இதுவாகும். இராமர் சீதையைக் கடிமணம் செய்து கொண்டதும் இதே நாளில்தான்.

இவ்விரதம் அநுஷ்டித்ததன் பயனாகத் திருமால் திருமகளையும், பிரம்மா சரஸ்வதியையும், இந்திரன் அயிராணியையும், சூரியன் உஷாவையும், அமிர்தவல்லி சுந்தரவல்லி கந்தவேளையும், சீதாதேவி இராமரையும், அடையப் பெற்றனர்.

நீண்ட நாள் திருமணம் தடைப்பட்டுள்ள ஆண் பெண் இருபாலாரும் இவ்விரதத்தை முறைப்படி அநுஷ்டித்துத் தம்பதி பூஜையும் செய்தால் விரைவில் திருமணப்பேறு கிட்டும் (தம்பதி பூஜை பற்றி இந்நூலின் சோமவாரவிரதம் பகுதியில் காணலாம்.) புத்திரப் பேறில்லாதோரும் இவ்விரதம் நோற்று மக்கட் பேறடையலாம்.

இரவில் ஒருபொழுது பழமும் பாயாசமும் உட்கொள்வது விதி. இயலாவிடில் மத்தியானம் ஒருபொழுது போசனம் செய்யலாம்.

"அன்னியர் அநேகர்முனி வர்விரதம் நோற்றே
அழகுதிகழ் மனைவியரோ டரும்போகம் துய்த்துப்
பொன்னவிர் கிண்கிணிநெகிழச் சிற்றடிமைந் தர்களைப்
பூத்தனரந் தத்தில்வளர் கயிலாய வரைசார்ந்(து)
உன்னரும்வீட் டின்பமடைந் தனர்மனைவி விழைந்தோர்
ஒளிறுவடி வாள்தடங்கன் உற்றுமணிக் குழைசேர்
கன்னியரை மணந்தனர்கன் னியர்களுமுன் நோற்றுக்
காமன்வடி வனையஎழிற் காதலர்ப்பெற் றனரே.
--- உபதேச காண்டம் (ஞானவரோதயர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூலவிரதம்

தைமாதத்து அமாவாசையில் சூலாயுதப்பெருமானாக சிவபிரானை வழிபட்டு இவ்விரதம் அநுஷ்டிக்கப்படுகிறது. பகல் ஒருபொழுது மாத்திரம் போசனம் செய்ய வேண்டும். இவ் விரதத்தை முறைப்படி அநுஷ்டித்துவருவோர் பகைவென்று, நோய்பிணியும் பாபமும் நீங்கி, நீண்ட ஆயுள் பெறுவர். முத்தியின்பமும் கிட்டும்.

சுதர்மன் யமனையும், திருமால் காலநேமி என்ற அசுரனையும், பரசுராமர் கார்த்தவீரியார்ச்சுனனையும் இவ்விரதப் பேற்றினாலேயே வென்றனர். இந்திரன் இவ்விரதம் கைக்கொண்டு தீராத தன் தலைநோய் நீங்கப்பெற்றான்.

வீரபத்திரப் பெருமான் பானுகம்பனுக்கு உபதேசித்தது இந்த விரதம்:-

மற்றுமுடை திரைப்புவியி லியாவர்சிலர் விரும்பி
மங்கலமாம் இவ்விரதம் நோற்கின்றோ ரவர்கள்
கொற்றமுறு வெம்படைசேர் அளப்பருமாற் றலரைக்
கூர்பலத்தி னாற்செற்றுத் தொந்த வினைப் பிணிகள்
முற்றுமொரு விச்சுருதிப் படிநிறையும் வாணாள்
மூத்திருந்து குலம்வளர்க்கும் மைந்தர்களைப் பெற்றுச்
சற்றுமிடை யுற்றிடாப் போகங்கள் அருந்திச்
சாற்றுகடை நாள்வீடு சார்குவர்சத் தியமே.

---- உபதேச காண்டம் (ஞானவரோதயர்)

தேவராயினு மிருநிலஞ் சிறந்தவ ரெனினும்
யாவராயினு மிடையறாப் பெரும்பிணி யினராய்ப்
பாவராயுழந் திதுமுறை நோற்பரேற் பயின்ற
நோவொழிந்துபின் னிருங்கதிப் பெருநலன் நுகர்வார்.

--- உபதேச காண்டம்



Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

# இடபவிரதம்

சிவபிரானை இடபாரூடராகத் தியானித்து வைகாசி மாத வளர்பிறை அட்டமியில் கைக்கொள்ளப்படும் விரதம் இது. பகலில் ஒருபொழுது போசனம் செய்தல் முறை. சகல செல்வ போகங்களையும் வழங்கவல்ல இவ்விரதத்தை அநுஷ்டித்துத் திருமால் கருடனையும் இந்திரன் ஐராவதத்தையும் இவ்வாறே அட்டதிக்குப் பாலகர்கள் ஒவ்வொருவரும் தத்தமது வாகனங்களைப் பெற்றனர்.

விரிநிலந் தேரிவ் விரதநோற் பவர்க்கு
விபவமோர் எட்டுமைந் தருஞ்சீர்
அரியகல் வியும்ஆ ரோக்கிய வடிவும்
ஆயுவும் அளப்பருந் தனமும்
பிரிவற வுடைத்தாம் அச்சுதன் நோற்றுப்
பிஞ்ஞகன் அருளினால் செல்வம்
பரிவுடன் அடைந்தூர் தியதெனக் கலுழப்
பறவையும் அடைந்தனன் மாதோ.

--- உபதேச காண்டம் (ஞானவரோதயர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ விரதம்

கந்தபுராணத்தில் சிறப்பித்துச் சொல்லப்படும் சிவவிரதங்களுள் பிரதோஷ விரதமும் ஒன்று. இரண்டு பட்சங்களிலும் வரும் திரயோதசித் திதியிலே அதாவது அமாவாசை, பௌர்ணமி இரண்டிற்கும் பிறகுவரும் பதின்மூன்றாவது நாளிலே இவ்விரதம் அநுஷ்டிக்கப்படுகிறது. சிவதருமோத்திரம், சிவரகசியம் முதலிய நூல்களிலும் இவ்விரத மகிமைக் கதைகள் காணப்படுகின்றன. சிந்தியம் என்னும் சிவாகமத்திலும் சகலாகம சங்கிரகத்திலும் பிரதோஷ விரத முறைகள் கூறப்படுகின்றன.

மாலைப்பொழுது என்னும் கருத்தையுடைய பிரதோஷம் என்ற சொல்லால் அழைக்கப்படும் இவ்விரத வழிபாடும் மாலை நேரத்துக்குரியதே. சூரிய அஸ்தமனத்துக்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும் அஸ்தமனத்துக்குப் பின் மூன்றேமுக்கால் நாழிகையுமாகச் சேர்ந்த ஏழரை நாழிகைப் பொழுது பிரதோஷ காலம் எனப்படும். (அதாவது பிற்பகல் சுமார் நாலரை மணியிலிருந்து இரவு ஏழரை மணி வரையிலான மூன்று மணித்தியாலம்) இக்காலத்தில் சிவபிரானை விசேஷமாக வழிபடுவதே இவ்விரதத்தின் முக்கியமான அம்சமாகும்.

தேவர்களும் அசுரர்களும் என்றும் இளமையோடு நித்திய ஜீவிகளாக வாழ விரும்பினார்கள். இதனைப் பிரமதேவரிடமும் விஷ்ணு மூர்த்தியிடமும் தெரிவித்தனர். இதனைக் கேட்ட விஷ்ணு "மந்தர மலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பை நாணாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடையுங்கள். அதில் தோன்றும் அமிர்தத்தை உண்டால் என்றும் இளமையுடன் இருக்கலாம்" என்றார். அதன்படி தேவர்கள் ஒருபக்கமும் அசுரர்கள் மறுபக்கமும் நின்று திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது முதலில் அங்கிருந்து ஆலகால விஷம் தோன்றியது.

அந்த விஷம் பேரழிவை ஏற்படுத்தப் போகிறதென்று அஞ்சி தேவர்கள் யாவரும் திருக்கைலாய மலைக்கு ஓடிச் சென்றார்கள். பரமசிவனது இருப்பிடத்தைச் சுற்றி இப்படியும் அப்படியும் இடமும் வலமுமாக ஓடித்தப்பி இறைவன் பாதங்களில் வீழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமசிவன் அவர்கள் மீதும் சர்வலோக ஆன்மாக்கள் மீதும் கருணை கொண்டு ஆலாலசுந்தரரை அனுப்பி அந்த விஷத்தை எடுத்துவரச் செய்து அதனைத் தாமே அருந்தித் தமது கண்டத்தில் நிறுத்தியருளினார். (இதனால், சிவபெருமான் நீலகண்டர் எனப் பெயர் பெற்றார்.)

ஆலகால விஷத்தை உட்கொண்டபின் அது சீவராசிகளை வருத்தாமலிருக்கும் பொருட்டு ஒரு கணநேரம் சிவபிரான் மௌனமாக இருந்தார். அப்போது தேவரும்; முனிவரும் உணவருந்தாது பரமசிவனைப் பிரார்த்தித்து நின்றனர். அந்தக் காலமே ஏகாதசியாகும். பயம் நீங்கிய தேவர்கள் இறைவனை வழிபட்டு அவரது அருளாணைப்படி மீண்டும் கடைந்தபோது அமிர்தம் தோன்றியது. அதனை அமரர் உண்டனர். இக்காலமே துவாதசியாகும்.

அதன்பின் அனைவரையும் மகிழ்விக்கும் வண்ணம் எம்பெருமான் இடபதேவரின் கொம்புகளுக்கிடையில் நின்று திருநடனம் செய்தருளினார். சிவபிரான் டமருகமேந்தி நடனம் செய்யத் திருமால் கடமுழா என்ற வாத்தியத்தை முழக்கத் தேவேந்திரன் சுருதி சேர்த்து நிற்க, தும்புரு நாரதர்கள் இசைபாடக், கலைவாணி மகர வீணையை மீட்டிப் பாடத், திருமகளும் இணைந்து பாட, நான்முகன் தாளம்போட, உமாதேவியாரும் தேவரும் முனிவரும் இந்தத் தாண்டவத்தை மகிழ்ச்சியுடன் தரிசித்து நின்றனர். இக்காலமே திரயோதசியாகும்.

இம்மூன்று திதிகளும் சேர்ந்த மூன்று நாட்கள் பரமசிவனுக்கு மிகச் சிறிய அளவுள்ள பிரதோஷ காலமாகும்.

வளர்பிறைத் திரயோதசியும், சனிக்கிழமையும் கூடிய ஒரு நன்னாளிலேதான் இந்த வைபவம் நிகழ்ந்தது. இதனால் தான் சனிப்பிரதோஷ விரதம் மிக விசேஷமாகச் சொல்லப்படுகிறது.

கணவரை இழந்த பதிவிரதைப் பெண்ணொருத்தி தனது சொந்த மகனும் வளர்ப்பு மகனாகிய ஒரு அரசகுமாரனுமாகிய இரு புதல்வர்களுடன் வாழ வழி தெரியாது வருந்தி வறுமையில் உழன்றபோது சாண்டில்ய முனிவரால் உபதேசிக்கப்பட்டு மூவருமாக இப் பிரதோஷ விரதத்தைக் கைக்கொண்டனர். அதன்பிரகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணகுமாரன் அறிவாற்றலும் பொருளும் பெற்றான். அரச குமாரன் அரசாட்சியைப் பெற்றான் என்று புராணம் உரைக்கும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களையும் தரக்கூடிய இவ்விரதத்தை முனிவர்கள் பலரும் இந்திரனும் கைக்கொண்டு அரும்பேறுகள் பல பெற்றனர். கடன், வறுமை, நோய், துர்மரணம், பயம் இவற்றைப் போக்க வல்லது இது. முக்கியமாகப் புத்திர லாபம் தரவல்லது. புத்திரரை விரும்புவோர் இவ்விரதமிருப்பது வழக்கம்.

இவ்விரத நாளிலே நித்திய கர்மானுஷ்டானங்கள் முடித்து பகல் முழுவதும் போசனம் இல்லாமல் இருந்து மாலை நாலரை மணிக்கு முன்னதாக ஸ்நானம் செய்து சாயம் சந்தியாவந்தனம், சிவபூஜை முதலியவற்றைச் செய்த பின் (மாலை நேரத்துக்குரிய நித்திய கர்மாநுஷ்டானங்கள்) சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்து பிரதோசஷ பூஜையைத் தரிசித்துப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

பிரதோஷ காலத்தில் சிவாலயத்தில் பிரதக்ஷிணம் செய்து வழிபடுவதற்கென்று சிறப்பான விதிமுறையொன்று ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ளது. இவ்விதியை ஆறுமுக நாவலரவர்கள் இரண்டாம் சைவ வினாவிடையில் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

"இடபதேவரை முதலில் வணங்கி அங்கிருந்து இடமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்தபின் சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரை வணங்கி வலமாகக் கோமுகைவரை சென்று மீண்டும் திரும்பி வந்து இடபதேவரை வணங்கி மறுபடி இடமாகச் சென்று சண்டெஸ்வரரை வணங்கித் திரும்பி வலமாகக் கோமுகைவரை சென்று (இத்தடவை இடபதேவரைத் தரிசியாது செல்ல வேண்டும்.) மறுபடி அங்கிருந்து திரும்பி இடபதேவரைத் தரிசியாமல் இடமாகச் சென்று சண்டேஸ்வரரை வணங்கித் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து அவரது இரண்டு கொம்புகளின் நடுவே சிவலிங்கப் பெருமானைத் தரிசித்துப் பிரணவத்தோடு கூட "ஹர ஹர" என்று சொல்லி வணங்க வேண்டும். பிரதோஷ காலத்தில் கோமுகையைத் தாண்டக் கூடாது என்பதே முக்கிய விதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிரதக்ஷிண முறை சோமசூத்திரப் பிரதக்ஷிணம் எனப்படும்.

இவ்வாறு ஆலயவழிபாடு செய்தபின் வீடு திரும்பிப் பிரதோஷ காலம் முடிந்த பிறகு (இரவு ஏழரை மணிக்கு மேல்) சிவனடியார்களுடன் போசனம் செய்ய வேண்டும்.

பிரதோஷ காலத்தில் சிவனுக்கும் நந்தியெம்பெருமானுக்கும் அன்ன நைவேத்தியத்துடன் காப்பரிசியும் நிவேதனம் செய்து அன்பர்களுக்கு விநியோகிக்க வேண்டும். காப்பரிசி என்பது பச்சரிசியையும் பயற்றம் பருப்பையும் நீரில் நன்கு நனைய வைத்து வடித்தெடுத்து அதற்குச் சர்க்கரையும் தேங்காய்ப்பூவும் சேர்த்துக் குழைத்துச் (உப்புச் சேராமல்) செய்வதாகும். இதனையே பிரதோஷ விரதத்துக்கு உணவாகக் கொள்ள வேண்டும். இது இயலாதவர்கள் சர்க்கரைச் சாதத்தை நிவேதனம் செய்து உண்ணலாம்.

பிரதோஷ காலத்தில் எவராயினும் எண்ணெய் தேய்த்தல், குளித்தல், போசனம் செய்தல், தூங்குதல் முதலியன செய்தலாகா. இவ்வேளையில் மந்திரஜபம், நூல்படித்தல் என்பனவும் செய்யாது மௌன விரதியாய் இருக்குமாறு புராணங்கள் விதிக்கின்றன.

சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை என்ற நான்கு மாதங்களுள் ஒன்றில் சனிக்கிழமையில் பிரதோஷம் வரும் நாளாகப் பார்த்து இவ்விரதம் ஆரம்பிக்கப்படவேண்டும். ஒரு வருட காலம் இந்தப் பிரதோஷ விரதத்தைக் கைக்கொண்ட பின் முறைப்படி விரதோத்யாபனம் செய்யலாம். விரும்பினால் தொடர்ந்து கைக்கொள்ளலாம். ஆனால் வருடா வருடம் விரத பூர்த்தியைச் செய்ய வேண்டும். 41, 55, 81, 97 என்ற எண்ணிக்கை வரும்வரை வளர்பிறைப் பிரதோஷம் மட்டும் அநுஷ்டிப்பார்கள் சிலர்.


இவ்விரதம் கைக்கொள்வோருக்கு கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்து, மரணவேதனை, பாவம் இவை யாவும் நீங்கி முத்தி சித்திக்கும் என்று ஆறுமுகநாவலரவர்கள் குறிப்பிடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண நல்குர(வு) இரும்பவம் இரும்பசி உரோகம்
அரண றும்பயம் கிலேசங் கேதம் அவமிருத்து
மரண வேதனை இவையெலாம் அகற்றென வணங்கிப்
புரண நாதனைப் பிரதோடத்தில் போற்றிடத் தகுமால்''

## சோமசூத்திரப் பிரதக்ஷக்ஷிணம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தேஸ்வர விரதம்

சிவவிரதங்களுள் ஒன்றான இந்த பக்தேஸ்வர விரதம் பார்வதி தேவிக்குப் பரமேஸ்வரனால் சொல்லப்பட்டது. இது மலட்டுத்தனம் முதலிய தோஷங்களை நீக்கிப் புத்திரசம்பத்தும் ஆயுள் ஆரோக்கியம் முதலியனவும் கொடுக்கும். பெண்களுக்குரியது இவ்விரதம். கார்த்திகைமாதப் பௌர்ணமியன்று ஆரம்பித்து பௌர்ணமி தோறும் அநுஷ்டிக்கப்பட வேண்டியது.

மாலைநேரத்தில் சந்தனத்தினால் சிவனையும், மஞ்சள் மாவினால் பார்வதிதேவியையும், மண்ணினால் நந்தியையும் செய்து வைத்து சங்கல்பபூர்வமாக ஆவாகனம்செய்து சகலோபசார பூஜைகளைச் செய்ய வேண்டும். (சந்தனம், மஞ்சள்மா, மண் என்பவற்றால் உருவங்களாகச் செய்வதல்ல! சாணத்தில் பிள்ளையார் பிடிப்பது போலச் சிறிய பிம்பத்தைச் செய்து வைத்து அவ்வுருவங்களில் அந்தந்த மூர்த்திகளை ஆவாஹனம் செய்யவேண்டும்.)

பருப்பு, நெய், சர்க்கரை, என்பன சேர்ந்த மாவினால் செய்த அப்பமும், நெய், சர்க்கரை என்பன சேர்த்த தோசையும் நைவேத்தியம் செய்து மாவிளக்கேற்றி வைத்து சுமங்கலி பூஜையும் செய்ய வேண்டும்.

மாவிளக்கு :- செந்தினையரிசிமாவுக்குத் தேனும் நன்கு கனிந்த வாழைப்பழமும் சேர்த்துப்பிசைந்து அந்த மாவினால் அகல் விளக்குப் போலச் செய்து அதில் நெய்விட்டுத் தூய்மையான வெள்ளைத் திரியினை இட்டு ஏற்றுவதே மாவிளக்காகும். தினைமா கிடைக்காவிட்டால் அரிசிமாவிலும் செய்யலாம்.

சுமங்கலி பூஜை:- நற்குண நற்செய்கைகளுடைய பிராமண சுமங்கலிப் பெண்களை வசதிக்கேற்றபடி ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு என்ற ஒற்றைப்படை எண்ணிக்கையில் வீட்டுக்கழைத்து அவர்களை சக்தி வடிவங்களாகப் பாவனைசெய்து பூஜித்து மஞ்சள், குங்குமம், பொன், புஷ்பம், தாம்பூலம், பட்டு (புடைவை முதலியன) என்பவற்றை வழங்கி உபசரித்தல் சுமங்கலி பூஜையாகும். வீட்டிற்கு அழைத்து உபசரிக்க முடியாதவர்கள் இப்பொருட்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான சுமங்கலிகளிடம் அவர்களது வீட்டிற்குச் சென்று சமர்ப்பிக்கலாம்.

இவ்விதம் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் செய்யவேண்டும். நிவேதனப் பொருள் ஏகோத்தர விருத்தியாக அதிகரித்துச் செல்லும். அதாவது முதல்மாதத்தில் (கார்த்திகை) ஒரு தோசை, ஒரு மாவிளக்கு இரண்டாம் மாதத்தில் (மார்கழி) இரண்டு தோசை, இரண்டு மாவிளக்கு என்றிப்படி முப்பத்துமூன்று பௌர்ணமிகளுக்குத் தொடர்ந்து செய்யவேண்டும்.

முப்பத்துமூன்றாவது பௌர்ணமி முடிவுற்றதும் விரதோத்யாபனம் செய்யவேண்டும்.

## திருவெம்பாவை (பாவைநோன்பு)

திருவாதிரை நட்சத்திரம் சிவனுக்குரியது. விசேஷமாக மார்கழித் திருவாதிரை நடேசரபிஷேக நாளாகவும் சிவவிரதங்களுள் ஒன்றாகவும் உள்ளது. இதுபற்றி இந்நூலின் வேறிடத்திலும் காண்க.

இத்திருவாதிரைக்கு முந்திய பத்து நாட்களும் திருவெம்பாவை விரதமாகக் கொள்ளப்படுகிறது. இது மிகப் பழைய காலத்திலிருந்து பெண்களால் அநுஷ்டிக்கப்பட்டு வரும் ஒருவிரதமாகும். ஆதியில் இது பாவை நோன்பு என்று சொல்லப்பட்டு வந்தது. மார்கழி மாதம் தேவர்களின் புலர்காலைப்பொழுது என்பதால் இம்மாதம் முழுவதுமே இறைவழிபாட்டுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. பீடை மாதம் என்று கூறி ஏனைய நற்காரியங்களுக்கு எடுக்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்டதன் காரணம் இதுவே. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் "மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்" என்று கூறியதிலிருந்தே மார்கழி மாதச் சிறப்பு உணரத்தக்கது.

மார்கழிமாதம் முழுவதுமே பனிக் குளிரையும் பொருட்படுத்தாது மிக அதிகாலையிலேயே எழுந்து நீராடி ஆலயம் சென்று திருவெம்பாவை, திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி முதலிய பாடல்களைப் பாடி வணங்குவர். ஆலயங்களில் இம்மாதம் முழுவதும் விசேஷ அதிகாலைப் பூஜைகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் பெண்கள் நாட்டின் வளம் கருதி மழை வேண்டியும், தமது நல்வாழ்க்கைச் சிறப்புக்கருதி நல்ல கணவனை வேண்டியும் இப் பாவைநோன்பினை அனுஷ்டித்து வந்தனர். அதிகாலை துயிலெழுந்து ஏனைய பெண்களையும் பாடிப்பாடி அழைத்துக்கொண்டு கூட்டமாகக் குளத்திற்குச் சென்று நீராடி இறைபுகழ் பாடி வழிபாடுகள் நிகழ்த்தி விரதமிருந்தனர்.

இந்த வழக்கத்தையும் அவர்கள் வாயில் ஒலிக்கும் நாட்டுப் பாடல்களையும் அவதானித்த மணிவாசகப் பெருந்தகையார் திருவெம்பாவையை அருளிச் செய்தார். திருவெம்பாவை விரதநாட்கள் பத்திலும் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி தவிர ஏனைய திருமுறைகளை ஓதாது காப்பிட்டுவைக்கும் மரபு நம்நாட்டில் நீண்டகாலமாக இருந்துவருகிறது. திருவெம்பாவையின் சிறப்பைக் காட்டுகிறது இது.

''நெய்யுண்ணோம், பாலுண்ணோம் நாட்காலே நீராடி கண்ணுக்கு மையிட்டு எழுதோம், மலர் இட்டுக் கூந்தல் முடியோம்'' என்று இந்த விரத நியமங்களை உரைக்கிறது திருப்பாவை. பத்து நாட்களும் தம்மைத் தமக்காக அலங்கரிக்காமலும் பால், நெய் சேர்க்காத உணவு உண்டும் (ஒரு நேர உணவு) இறைவழிபாடு செய்து நல்ல மழையையும் நல்ல கணவரையும் வேண்டிப் பெண்கள் நோற்கும் நொன்பு இது. பத்தாம் நாள் உபவாசமிருந்து பதினோராம் நாள் காலை பாரணை செய்யலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணினி வடிவமைப்பு
ஸ்ரீவித்யா கணினி அச்சகம்,
இணுவில்.
T. P : 021 222 6004

அச்சுப் பதிப்பு
சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
பலாலி வீதி, கோண்டாவில்
T. P : 021 222 6722

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org